DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 37/2014

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சிவக்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | மாரிமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/07/2024

(1ம் எதிரி மயிலான் என்ற வேல்மயில்ராஜ் இறந்துவிட்டார். 2,3 எதிரிகள் ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் இளநீர் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 14 வருடங்கள் இருக்கும் இளநீர் வியாபாரத்திற்கு வேல்மயில்ராஜ் என்பவர் அவரது தோட்டத்திற்கு அழைத்துச்சென்றார். கூலி கேட்டதில் வாய்தகராறு ஆகிவிட்டது. அதில் வேல்மயில்ராஜ் என்னை அடித்துவிட்டார். அதில் எனக்கு முதுகில் உள்காயமும், மண்டையிலும் காயம் ஏற்பட்டது. பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். பழனி அரசு மருத்துவமனையில் சம்பவம் தொடர்பாக போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் சேர்ந்து தான் என்னை அடித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**இல்லை.**

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.07.24 17:54:21 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/07/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 37/2014

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகேந்திரன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வெள்ளைக்கண்ணு | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/07/2024

(1ம் எதிரி மயிலான் என்ற வேல்மயில்ராஜ் இறந்துவிட்டார். 2,3 எதிரிகள் ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் தோட்ட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து தோட்டத்துக்காரர்கள். கடந்த 29.03.2014ம் தேதி மதியம் 3.30 மணிக்கு நான் எனது தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது எனது பக்கத்து தோட்டமான விருப்பாச்சியை சேர்ந்த குப்புச்சாமி மகன் மயிலான் என்ற வேல்மயில்ராஜ் என்பவர்

தோட்டத்தில் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்த போது அவரது தோட்டத்தில் அ.சா.1 சிவக்குமார் இளநீர் பிடுங்கி கீழே போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அவர் தனது வேலை முடித்து மயிலான் என்ற வேல்மயில்ராஜிடம் சம்பளம் தரும்படி கேட்டார் என்றும், அதற்கு மயிலான் எனற் வேல்மயில்ராஜ் அவரது தம்பி கார்த்திகைவேல்ராஜ் அவரது மச்சுணன் சங்கிலி கருப்பச்சாமி ஆகிய மூவரும் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி மயிலான் என்பவர் கீழே கிடந்த தென்னை மட்டையாலும் கார்த்திகை வேல்ராஜ், சங்கிலி கருப்புச்சாமி ஆகியோர் கைகளாலும் மாறி மாறி சிவக்குமாரை அடித்தார்கள் என்றும், அதில் சிவக்குமாருக்கு இரண்டு கைகளிலும் இடது கால் தொடையிலும் உடம்பில் சிராய்ப்பு காயமும் தலையில் ஊமைக்காயமும் ஏற்பட்டது என்றும், எதிரிகள் மூவரும் சிவக்குமாருக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.07.24 17:54:31 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/07/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 37/2014

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஈஸ்வரி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | காளிமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/07/2024

(1ம் எதிரி மயிலான் என்ற வேல்மயில்ராஜ் இறந்துவிட்டார். 2,3 எதிரிகள் ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கோலப்பொடி வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 8,9 வருடங்கள் இருக்கும் தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை. நான் வீட்டில் இருந்தேன். எனது மகன் சிவக்குமார் ரத்தக்காயங்களுடன் வீட்டிற்கு வந்தார். மயிலான் என்பவர் வேலைக்கு எனது மகனை கூட்டிச்சென்றார். அங்கு அடிதடி ஏற்பட்டதாக சொன்னார். நாங்கள் சத்திரப்பட்டி காவல்நிலையம் சென்றோம். பழனி அரசு மருத்துவமனையில் எனது மகனை சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 29.03.2014 ம் தேதி மதியம் 3.30 மணிக்கு மயிலான் என்ற வேல்மயில்ராஜ் எனது மகன் சிவக்குமாரை தோட்டத்தில் இளநீர் பறிப்பதற்காக அழைத்துச்சென்றார் என்றும், தோட்டத்தில் அ.சா.1 சிவக்குமார் இளநீர் பறித்து போட்டுவிட்டு தனக்கான சம்பளம் கேட்ட போது மயிலான் என்ற வேல்மயில்ராஜ் அவரது தம்பி கார்த்திகைவேல்ராஜ் அவரது மச்சுணன் சங்கிலி கருப்பச்சாமி ஆகிய மூவரும் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி மயிலான் என்பவர் கீழே கிடந்த தென்னை மட்டையாலும் கார்த்திகை வேல்ராஜ், சங்கிலி கருப்புச்சாமி ஆகியோர் கைகளாலும் மாறி மாறி சிவக்குமாரை அடித்தார்கள் என்றும், அதில் சிவக்குமாருக்கு இரண்டு கைகளிலும் இடது கால் தொடையிலும் உடம்பில் சிராய்ப்பு காயமும் தலையில் ஊமைக்காயமும் ஏற்பட்டது என்றும், எதிரிகள் மூவரும் சிவக்குமாருக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், எனது மகன் சிவக்குமார் என்னிடம் சொன்னார் என்றும், சிவக்குமாரை பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், சிகிச்சையில் இருந்த போது சிவக்குமார் போலீசாரிடம் சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.07.24 17:54:50 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/07/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 37/2014

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துவேல் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருத்திவீரத்தேவர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 24/07/2024

(1ம் எதிரி மயிலான் என்ற வேல்மயில்ராஜ் இறந்துவிட்டார். 2,3 எதிரிகள் ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் விருப்பாச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 10 வருடங்கள் இருக்கும் தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை. மாலை 7.00 மணி இருக்கும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன். சிவக்குமார் எனக்கு மச்சுனன் மகன். சண்டை ஏற்பட்டதாக காவல்நிலையத்திற்கு சென்று இருப்பதாக தகவல் கேள்விட்டு காவல்நிலையம் சென்றபோது கையொப்பம் செய்து கொடுத்தேன். **பார்வைமகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னைவிசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 30.03.2014ம் தேதி காலை 7.00மணிக்கு நானும், செல்லமுத்துவும் எங்கள் ஊருக்கு வடக்கே இருக்கும் அழகுநாச்சியம்மன் கோவிலுக்கு சென்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது வேல்மயில்ராஜ் தோட்டத்தில் சத்திரப்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் காவல்நிலைய குற்ற எண் 34/2014 வழக்கின் சம்பவ இடத்தை எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தார் என்றும், அதில் நானும், செல்லமுத்துவும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.07.24 17:54:56 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 24/07/2024